செய்தி வெளியீடு எண்: 541 நாள்: 28.10.2015

**‘எந்தஒருதிட்டமானாலும் அதனைதொலைநோக்குப் பார்வையில்வடிவமைப்பதில் மாண்புமிகுதமிழ்நாடுமுதலமைச்சர் புரட்சித்தலைவிஅம்மாஅவர்களுக்குநிகர் அவர்களே’விலையில்லாமிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறிகள்வழங்கிடும் திட்டஆய்வுக்கூட்டத்தில் வருவாய்த்துறைஅமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார் அவர்கள்தகவல்.**

‘தமிழ்நாட்டுமக்களின் நலன் ஒன்றேஎனது குறிக்கோள். அவர்களின் முன்னேற்றமே எனது இலட்சியம் என்கிற உயரிய நோக்கத்தில், நல்லபல திட்டங்களை தொலைநோக்குப் பார்வையில் வடிவமைத்து அதனைமக்களின் மனதில் நிலைநிறுத்துவதோடு, அண்டைமாநிலங்களும் வியந்து போற்றிடும் வண்ணம் செயல்படுத்துவதில் மாண்புமிகுதமிழ்நாடுமுதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நிகர் அவர்கள்தான் என்றால்மிகையாகாது.’ என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு ஆர்.பி.உதயகுமார் அவர்கள், விலையில்லாமிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறிகள் வழங்கிடும் திட்டம் குறித்து இன்று (28.10.015) எழிலகம் வருவாய் கருத்தரங்க கூடத்தில் மாநிலஅளவில், அனைத்து சிறப்புதுணை ஆட்சியர்கள் (சிறப்புத் திட்ட செயலாக்கம்) பங்கேற்ற ஆய்வுக்கூட்டத்தில் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்கள்.

பெண்களை பெரிதும் கவர்ந்துள்ள விலையில்லாமிக்சி, கிரைண்டர், மின்விசிறிகள்மற்றும் மின்அடுப்புகள் வழங்கிடும் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. ஆர்.பி.உதயகுமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வருவாய்த்துறைச் செயலர் திரு. ஆர். வெங்கடேசன் முதன்மைச்செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் திரு.அதுல்யமிஸ்ரா, இ.ஆ.ப., சமூகபாதுகாப்புத் திட்டங்கள் ஆணையர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆப.,மற்றும் வருவாய் நிருவாககூடுதல்ஆணையர் முனைவர் மு.ஜெயராமன் இ.ஆ.ப., ஆகியோர் கலந்துகொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கடந்த 30.6.2011 அன்றைய நாளில், அரிசி பெறத் தகுதியுள்ள குடும்ப அட்டை வைத்துள்ள 1.85 கோடி குடும்பங்களில் உள்ள மகளிருக்கு விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறிகள் வழங்கிட உத்தரவிட்டார்கள்.

அதனடிப்படையில் ஏறத்தாழ 8,667 கோடி ரூபாய்செலவில், 5 கட்டங்களாக வழங்கிட தீர்மானிக்கப்பட்டு, முதற்கட்டமாக, 2011–12 ஆம் ஆண்டில் ரூ. 1,370 கோடி ரூபாய்செலவில், 25 இலட்சம் மகளிருக்கும், இரண்டாம் கட்டமாக, 2012–13 ஆம் ஆண்டில் ரூ. 2,000 கோடிசெலவில்,

35 இலட்சம் மகளிருக்கும், மூன்றாம் கட்டமாக, 2013–14 ஆம் ஆண்டில் ரூ. 1,500 கோடிசெலவில், 35 இலட்சம் மகளிருக்கும், நான்காம் கட்டமாக, 2014–15 மற்றும் 2015–16 ஆம்ஆண்டுகளில் ரூ. 3,797 கோடி செலவில் 45 இலட்சம் மகளிருக்கு வழங்கிட நிர்ணயிக்கப்பட்ட இலக்கானது தற்பொழுது முடிவுறும் தறுவாயில் உள்ளது. மேலும் 5ஆம் கட்டமாக 45 இலட்சம் மகளிருக்கும் வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. என்று குறிப்பிட்டார்கள்.

மாநிலத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்களில் அதிக நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும் திட்டங்களில் இத்திட்டத்தினை திறம்பட செயல்படுத்திடும் பொருட்டு, அனைத்து மாவட்டங்களுக்கும் தனித்துணை ஆட்சியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளது. ஆகையினால் இத்திட்டத்தினை மிகுந்த கவனத்தோடு செயல்படுத்திட அலுவலர்களாகிய நீங்கள் அனைவரும் ஒருங்கிணைத்து அர்ப்பணிப்போடு செயலாற்றி, பயனாளிகளுக்கு தாமதமின்றி விரைந்து வழங்கிட வேண்டும். மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்கிற இலட்சிய நோக்கோடு அயராது பணியாற்றி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும் அவர்களின் தலைமையிலான ஆட்சிக்கும் நற்பெயரினையும், பெருமையினையும் சேர்த்திடவேண்டும்.' என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

முதன்மைச் செயலர் / வருவாய்நிருவாகஆணையருக்காக,

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**